# பாராளுமன்ற விவாதப் பதிவுகளை எண்ணிமப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

ஆரம்ப கால கட்டங்களின் அரசு மற்றும் அரசாங்கத்தினது செயன்முறைகளை தீர்மானித்தல் , கொள்கை வகுப்பு, சட்டசபையை உருவாக்குதல் ஆகிய அனைத்தும் சட்டத்துறையினாக நடபெற்று வருகிறது. இந்த அனைத்து செயன்முறைகளையும் நிறைவேற்றுமிடம் பாராளுமன்றம் ஆகும். இங்கு நடைபெறும் அனைத்து விடயங்களையும் அதாவது சட்டம், அரசியல் நிகழ்வுகள், அரசியல் அபிப்பிராயங்கள் அனைத்தும் பிரதிகளாக பதியப்பட்டுள்ளன.

1833 ஆம் ஆண்டு முதலாவது தடவையாக பாராளுமன்றம் கூட்டப்பட்டது. அப்போது அரச ஆவணங்கள் கையெழுத்துப்பிரதிகளாக அரச ஊழியர்களை வைத்து அதே நேரத்தில் எழுதப்பட்டன. முதல் முறை கலந்துரையாடல் குறிப்புகளாக பதிவு செய்யப்பட்டு (Meeting minutes ) பின்பு sessional papers ஆக பதியப்பட்டு இறுதியில் Hansards ஆக வடிவம் பெற்று இன்று வரை பிரதிகளாக பதியப்பட்டு வருகின்றன.

## செயற்றிட்ட நோக்கம்

வரலாற்றுச் சான்றுகளில் மிக முக்கியமானவையாக காணப்படும் Hansard தற்போது அழிவடைந்த நிலையிலும் பக்கங்கள் கிழிக்கப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன . இவை தற்போது பேராதனை பல்கலைக்கழக நூலகம் , தேசிய ஆவணக காப்பகம், தேசிய அருங்காட்சியகம் போன்ற இடங்களில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றை அடையாளப்படுத்தி எண்ணிமப்படுத்தி பாதுகாத்தல் மிக முக்கியமாகும்.

## செயற்றிட்ட காலவரையறை

ஒரு வருட காலப்பகுதிக்குள் இப் பாராளுமன்ற பிரதிகளை மற்றும் அவற்றுடன் தொடர்புடைய statics report , district report , central bank reports ஆகியவற்றையும் எண்ணிம்படுத்தி நூலக வலைத்தளத்தில் இணைத்தல் மூலம் இச்செயற்றிட்டம் பூரணப்படுத்தப்படும்.

## எதிர்பாக்கப்படும் செலவீனம்

**LKR 5,476,332**

மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**